

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்களபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே தமிழக முதல்வரின் கிராமங்கள் தோறும் கிராம சபைக் கூட்டம் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது.இதனைத் தொடர்ந்து அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஒன்றிய கழகச் செயலாளருமான கே.பி. ராமசுவாமி, திட்ட இயக்குனர் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம ஊராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் (13-10-2025) அன்று நடைபெற்ற மாநிலங்களவை உத்தரவாதக் குழு கூட்டத்தில் கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் பங்கேற்றார். இதில் அரசு உறுதிமொழிகளின் தற்போதைய நிலைமையும், அவற்றை விரைவாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டம், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக இளைஞர் அணி மற்றும் கரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து மாபெரும் கபடி போட்டியை நடத்தியது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, போட்டியை பார்வையிட்டார்.

### ஏற்காடு தொகுதியில் – காபித் தூள்

# தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு மானியம் வழங்கப்படும்!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதில்!

சென்னை, அக். 17-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் கு.சித்ரா கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அளித்த பதிலும் வருமாறு:-

**திருமதி. கு. சித்ரா:** ஏற்காடு தொகுதி, ஏற்காட்டில் (அதிக அளவில் காபி எஸ்டேட் உள்ளதால் இங்கு உள்ள மலை வாழ் மக்களுக்கு அவரது வாழ்வாதாரத்தை உயர்த்திட) காபி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதினால் 200க்கும் மேற்பட்டோருக்கு வேலை கிடைக்கும். எனவே. இங்கு தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் தா.மோ. அன்பரசன் :** சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதி, ஏற்காட்டில் காபி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை .

**கு.சித்ரா:** ஏற்காட்டில் காபிக்கொட்டைகள் அதிகம் விளைவதால் அங்குள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திடும் வகையில் காபி தூள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்:** சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் சுமார் 7 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் காபி பயிரிடப்பட்டு ஏறத்தாழ 10 ஆயிரத்து 400 மெட்ரிக் டன் அளவு காபி கொட்டை சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில், காபி தூள் தயாரிக்கும் 157 குறுந்தொழில் நிறுவனங்களும் 1 பெரிய நிறுவனமும் இயங்கி வருகிறது. இந்த நிறுவனங்களின் மூலம் சுமார் 1,500 க்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். இங்கு உற்பத்தியாகும் காபி கொட்டை உள்ளூர் பயன்பாட்டிற்கும், அருகில் உள்ள மாவட்டங்களின் தேவையினை பூர்த்தி செய்யவே போதுமானதாக இல்லை. எனவே, ஏற்காட்டில் காபி தூள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் அவசியம் இல்லை.

**கு.சித்ரா:** காபி தோட்ட தொழிலாளர்களுக்கு கூலியினை உயர்த்தி தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் தா.மோ.அன்பரசன் :** குறைந்தபட்ச கூலி நிர்ணயம்



செய்வது தொழிலாளர் நலத் துறையின் கீழ் வருவதால் அத்துறையின் அமைச்சர் அவர்கள் இதன் மீது நடவடிக்கை மேற்கொள்வார்கள். தமிழகத்தில் குறிப்பிட்ட பகுதிகளில், சில விலை பொருட்கள் குறிப்பிட்ட காலத்தில் அதிக அளவில் விளையும். அவ்வாறு விளையும் வேளாண் விளைபொருட்களை வீணாகாமல் தடுக்க அவற்றை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக தயாரிக்க முன்வரும் தனியார் தொழில் முனைவோர்களுக்கு தொழில் தொடங்க ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும், மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவிகளும் MSME துறையின் மூலம் வழங்கப்படுகிறது. கடந்த 4 ½ ஆண்டு காலத்தில், சேலம் மாவட்டத்தில் மட்டும் ரூ. 95 கோடியே 15 லட்சம் மானியத்துடன் ரூ. 380 கோடியே 20 லட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டு 2 ஆயிரத்து 357 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்கி உள்ளனர். இதில், ரூ. 4 கோடியே 50 லட்சம் மானியத்துடன் ரூ. 9 கோடியே 75 லட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டு 98 மலைவாழ் பழங்குடியினர் தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

மேலும், MSME துறையின் மூலம் வழங்கப்படும் முதலீட்டு மானியம் உள்ளிட்ட 10 வகையான மானியத் திட்டத்தின் கீழ் காபி தூள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உட்பட 523 நிறுவனங்களுக்கு, ரூ. 27 கோடியே 50 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்காடு தொகுதியில், காபி தூள் தொழில் தொடங்க முன் வரும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு இந்த துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் மானியம் மற்றும் கடன் உதவிகள் வழங்கப்படும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### அமைப்பாளர் இரா.சிவா முன்னிலையில்

# புதுச்சேரியில் 8 தொகுதிகளில் கழக உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, அக்.17-

தி.மு.கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்-மொழி-மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் "உடன் பிறப்பே வா" பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.

புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டு, தலைமைக் கழகத்தால் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்கள் தலைமையில் ஏற்கனவே முத்தியால்பேட்டை, உப்பளம், முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு, உருளையன்பேட்டை ஆகிய ஐந்து தொகுதிகளில் கடந்த 6-ஆம் தேதி உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக இன்று ஊசுடு தொகுதிக்கு உட்பட்ட உளவாய்க்கால் கிராமத்திலும், இந்திரா நகர் தொகுதி தர்மாபுரியிலும், கதிர்காமம் தொகுதி சண்முகாபுரத்திலும், தட்டாஞ்சாவடி தொகுதி பாக்குமுடையான்பேட்டிலும், இலாசுப்பேட்டை தொகுதி அரசு மருத்துவமனை அருகிலும், காலாப்பட்டு தொகுதி கருவடிக்குப்பம் பாரதி நகரிலும், காமராஜர் நகர் தொகுதி கிருஷ்ணா நகரிலும், ராஜ்பவன் தொகுதி மிஷன் வீதி - பெருமாள் கோவில் சந்திப்பிலும் திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் தொடங்கப்பட்டது.

முகாமிற்கு, மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமை வகித்தார்.

அவைத் தலைவர் எஸ். பி. சிவக்குமார், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திமுக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கலந்து கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் பணியை தொடங்கி வைத்தார்.

முகாமிற்கான ஏற்பாடுகளை தொகுதி செயலாளர்கள் பி. சா. இளஞ்செழியப் பாண்டியன், செ. ராதாகிருஷ்ணன், ப. வடிவேல், க.ர. ஆறுமுகம், கோ. தியாகராஜன், சே. சத்தியவேலு, ர. சிவக்குமார், ஜெ. மோகன் மற்றும் தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளரான மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்தீஷ், இந்திரா நகர் பசுபிக் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தா. சரவணன், பூ. மூர்த்தி, மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், ஜெ. வேலன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பிகலிய. கார்த்திகேயன், ம. கலைவாணன், அணிகளின் அமைப்பாளர்கள் தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ. முகிலன், ஆ. அகிலன் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



கோவை பீளமேடு அண்ணாநகர் அலுவலகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வார்டு எண் 52 க்குட்பட்ட மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு பரிசுப் பொருட்களை கோவை மாநகராட்சி, கிழக்குக் மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் வழங்கினார். இதில் கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், வட்டக் கழகச் செயலாளர் கி.நாராயணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



"எறும்பனையர் எம் மறவர்
இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர்
கலைஞர்

.............. என்றும் உங்கள் வழியில் பேரன் ..............

மன்னை த.சோழராஜன் B.E.,

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி

(மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்)